# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் frmichaelsitaram@gmail.com | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:***ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **01 டிசம்பர் 2019** | **திருவருகைக் காலம் முதல் ஞாயிறு** | **முதல் ஆண்டு** |



## உங்கள் சிந்தனைக்கு…

திருவழிப்பாட்டின் புதிய ஆண்டைத் தொடங்கும் இவ்வேளையில் திருவருகைக்கால முதல் ஞாயிறான இன்று இயேசுவின் வருகையை எதிர்நோக்கியிருக்கும் அன்பு சகோதர சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பு வாழ்த்துக்கள்.

கிறிஸ்துவின் முதல் வருகையைக் கொண்டாடத் தயாராகும் நாம் அவரின் இரண்டாம் வருகைக்கு நம்மை நாமே தயாரிக்க வேண்டிய நிலையில் உள்ளோம். இன்றைய மூன்று வாசகங்களும் இறைமகனின் வருகைக்காக இறைமக்கள் தயார்நிலையில் இருக்க வேண்டும். இறைமகனின் வருகையை எதிர்நோக்கி வாழ வேண்டும் என்ற கருத்துகளை வலிறுத்திக் கூறுகின்றன. நற்செய்தி வாசகம் இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்து, விழிப்பாய் இருக்கவும் அழைப்பு விடுக்கின்றது.

இன்று ஏற்றப்படும் திருவருகைக் காலத்தின் முதல் மெழுகுவர்த்தி நம்பிக்கையைக் குறிக்கின்றது. இருள் ஒளி அகற்றி அக ஒளி ஏற்றி இறைவனின் ஒளியின் மக்களாய் இந்தக் கிறிஸ்து பிறப்பு பெருவிழாவிற்குத் தயாராகும் வேளையில் அவரின் இரண்டாம் வருகை எதிர்நோக்கிப் புனிதப் பயணம் மேற்கொள்வோம். இயேசுவின் இரண்டாம் வருகை எப்போது என்று தெரியாத நிலையில் நாம் விழிப்புடன் இருந்திட வேண்டிய ஞானத்தையும், இறுதிக் காலத்தை நினைவில் கொண்டு நம் மீட்பிற்கான செயல்களில் ஈடுபடவேண்டிய அருளையும் பெற்றிட உருக்கமுடன் வேண்டி இத்திருப்பலியில் பங்குகொள்வோம்.

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு



அன்பார்ந்தவர்களே! பல்வேறு நிதிசேகரிப்பு நடவடிக்கைகள் மூலமாக, நமது ஆலயப் புதுப்பிக்கும் பணிக்காக **இதுவரை** S$ 4.3 **மில்லியன்** சேர்க்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். மனமுவந்து நன்கொடையளித்த உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்களது நன்றிகள்! நமது ஆலயப் புதுப்பிக்கும் பணிக்குத் தேவையான முழுத் தொகையான S$ 6.2 **மில்லியனை** அடைவதற்கு தொடர்ந்து உங்கள் தாராள மனதையும், செபங்களையும் வேண்டி நிற்கின்றோம்.

## திருவருகைக்கால ஒப்புரவு அருட்சாதனம் வழங்குதல்

### தூய லூர்து அன்னை ஆலயம்



**15-12-2019** ஞாயிறு : காலை **8:45** மற்றும் மாலை **5:30** மணி **(தமிழ்)**

**17-12-2019** செவ்வாய் : இரவு **8:00** மணி **(ஆங்கிலம்)**

பாவமன்னிப்பு திருவருட்சாதனத்தைப் பெற்று
கிறிஸ்துவின் பிறப்பிற்காக நம் ஆன்மாவைத் தயாரிப்போம்.

## இரண்டாவது காணிக்கை

இன்று திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாவது காணிக்கை, தூய வின்சென்ட் தெ பவுல் சபையினர் செய்யும் நற்பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும். உங்கள் தாராள மனதிற்கு மிக்க நன்றி.

## திருவருகைக்கால ஆன்மீக கையேடு

நமது சிங்கப்பூர் உயர் மறைமாவட்டத்தின் புதிய நற்செய்தி அறிவிப்பு மையத்தினால், திருவருகைக்கால ஆன்மீக கையேடு தமிழ் மொழியில் தயார் செய்யப்பட்டு நமக்காக வழங்கப்பட்டுள்ளது. தயவு செய்து அனைவரும் ஒரு பிரதியை எடுத்துச் சென்று பயன் பெறவும்.

## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு



**14-12-2019 சனிக்கிழமை, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**

இரவு முழுதும் விழித்திருந்து, இறைவனின் அன்பை சுவைக்கவும், அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாடவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

## கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட திருப்பலி நேரங்கள்



**24-12-2019, செவ்வாய்:**
மதியம் **12:30** மணிக்கு திருப்பலி (ஆங்கிலம்)
இரவு **8** மணிக்கு ஆங்கிலத்தில் கிறிஸ்மஸ் பாடல்கள், இரவு **9** மணிக்குத் திருப்பலி (ஆங்கிலம்)
இரவு **11** மணிக்கு தமிழில் கிறிஸ்மஸ் பாடல்கள், இரவு **11:30** மணிக்குத் திருப்பலி (தமிழ்)



**25-12-2019, புதன், கிறிஸ்மஸ் தினம்:**
காலை **7:30, 11:30** மற்றும் மதியம் **1** மணி (ஆங்கிலம்), காலை **9:15** மணி (தமிழ்)

**31-12-2019, செவ்வாய்:** மதியம் **12:30** மணி (ஆங்கிலம்)

**31-12-2019, செவ்வாய், புத்தாண்டு திருப்பலி:**
இரவு **9** மணி திருப்பலி (ஆங்கிலம்)
இரவு **11** மணிக்கு தமிழில் நன்றி ஆராதனை, இரவு **11:30** மணிக்கு திருப்பலி (தமிழ்)




**01-01-2020, புதன், புது வருட தினம்:**
காலை **9** மணிக்கு திருப்பலி (ஆங்கிலம்), காலை **10:30** மணிக்கு திருப்பலி (தமிழ்)

**குறிப்பு:** அனைத்து திருப்பலிகளும் முடிவடைந்ததும், கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட தினத்தில் நம் ஆலய வளாகத்தின் இரும்புக் கதவுகள் பூட்டப்படும். பொது விடுமுறை தினங்களில் நம் பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | எசாயா 2:1-5 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 122: 1-2, 4-5, 6-7, 8-9 |
| **பதிலுரை:** அகமகிழ்வுடன் ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம். | |
| **இரண்டாம் வாசகம்:** | உரோமையர் 13:11-14 |
| **வாழ்த்தொலி:** அல்லேலூயா, அல்லேலூயா! ஆண்டவரே, உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும்; உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும். அல்லேலூயா. | |
| **நற்செய்தி வாசகம்:** | மத்தேயு 24:37-44 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 &மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 &மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி(ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதிஇரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:**உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

